ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்

**திகதி** 2018 செத்தெம்பர் 14

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) – 2018 ஓகத்து

### தயாரிப்பு நடவடிக்கைகள் விரைவான வீதத்தில் அதிகரித்திருந்தது

**தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்,** முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட 57.2 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 ஓகத்தில் 58.2 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்திருந்தது. ஓகத்தில் தயாரிப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடானது விசேடமாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் தயாரிப்பு துறையில் புதிய கட்டளைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் வழிநடத்தப்பட்ட உற்பத்தியின் அதிகரிப்பினால் பிரதானமாக உந்தப்பட்டது. மேலும், தொழில்நிலையும் புதிய தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பினூடாக ஒரு உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்ததுடன், இதற்கு விசேடமாக உணவு மற்றும் குடிபான துறையினுள் நடவடிக்கைகளின் அதிகரிப்பிற்கான சாதகமான எதிர்பார்க்கையினால் வழிநடத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவுகளின் இருப்பு, ஒரு மெதுவடைதலை காண்பித்ததுடன் விசேடமாக ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு நடவடிக்கைளில் உணரப்பட்டது. இருப்பினும், புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் தயாரிப்பில் கொள்வனவுகளின் இருப்பு உணரப்பட்டது. அதேவேளை, நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரமானது வழக்கமாக பொருளாதாரத்தின் குறுகிய காலத்தில் நடவடிக்கைகளின் விரிவாக்கத்தின் துரித வளர்ச்சியை குறித்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இச்சந்தர்ப்பத்தில், நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரத்தில் ஏற்பட்ட மிதமடைதலானது கடந்த மாதத்தில் பிரதானமான இறக்குமதி நாடுகளில் காணப்பட்ட வழங்கல் இடையூறுகள் சாதாரண நிலைமையாகுதலின் காரணமாக அமைந்திருந்தது. ஆகையால், இது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தினை குறித்துக்காட்டவில்லை. ஒட்டுமொத்தமாக, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் ஓகத்தில் விரிவடைந்தமையினைக் காண்பித்து நடுநிலையான 50.0 எல்லைக்கு மேலான பெறுமானங்களை பதிவு செய்தது. அதேவேளை, நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பானது அடுத்த மூன்று மாதங்களுக்கான மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | 57.9 | 56.1 | 54.3 | 54.4 | 59.0 | 54.8 | 58.8 | 59.1 |
| | 2018 | 51.7 | 55.6 | 65.6 | 45.5 | 60.6 | 57.6 | 57.2 | **58.2** | - | - | - | - |

| மாறி | யூலை | ஓகத்து | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.2** | **58.2** | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | | | |
| புதிய கட்டளைகள் | 59.5 | 60.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 57.5 | 60.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.0 | 56.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.5 | 57.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 55.0 | 53.0 | - | நீட்சி, மெதுவான வீதத்தில் |

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு



## பணிகள் துறை வளர்ச்சி மெதுவடைந்தது

**பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்,** 2018 யூலையில் பதிவு செய்யப்பட்ட 57.8 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 ஒகத்தில் 57.0 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தது. இது, பணிகள் துறையானது 2018 ஒகத்தில் தொடர்ச்சியாக மெதுவடைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன், புதிய தொழில்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் தொழில்நிலையின் வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டது. புதிய தொழில்களில் வளர்ச்சியானது நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி துறைகளில் பிரதானமாக அவதானிக்கப்பட்டது. டிஜிட்டல் வங்கித்தொழில் அலகுகளின் உருவாக்கம் மற்றும் பணிகள் விநியோக மூலங்களின் முன்னேற்றங்கள் போன்றன இவ்வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணிகளாக பதிலுறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறை மேம்பாட்டின் காரணமாக தொழில் நடவடிக்கைகள், பிரதானமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துறையில் அதிகரித்திருந்தன. மேலும், ஒகத்தில் ஹஜ் பெருநாள் பண்டிகை காரணமாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தக துறையின் தொழில் நடவடிக்கைகளுக்கு சாதகமான தொக்கமொன்றினை ஏற்படுத்தியிருந்தது. ஒகத்தில் அதிகரித்திருந்த தொழில்நிலை மட்டமானது நிலுவையிலுள்ள பணிகள் குறைவடைவதற்கு பகுதியளவில் பங்களித்திருந்தது. 15 மாதகாலப்பகுதிக்கான குறைவடைந்த சுட்டெண் பெறுமதியினை காண்பித்திருந்தும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளில் பணிகள் வழங்குநர்களின் எதிர்காலவாய்ப்பு வலுப்படுத்தப்பட்டது. நிதியியல் பணிகள் துறை பதிலிறுப்பாளர்கள், ஏதேனும் பிரதான முதலீட்டு நடவடிக்கைகளுக்காக 2019ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவுசெலவுத் திட்டம் அறிவிக்கப்படும் வரை காத்திருக்கின்றனர் என்பதனையும் சுட்டிக்காட்டியிருந்தனர். எரிபொருள் விலைகளின் மேல்நோக்கிய திருத்தம் மற்றும் தேய்வடைந்த உள்நாட்டு நாணயம் என்பவற்றின் காரணமாக பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் உயர்வான வீதத்தில் அதிகரித்திருந்தன. பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவும் ஒகத்தில் அதிகரித்திருந்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஒகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள்** | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | 55.3 | 59.2 | 59.1 | 60.1 | 57.0 | 55.3 | 57.4 | 61.2 |
| | 2018 | 56.6 | 58.4 | 58.0 | 53.2 | 56.9 | 58.7 | 57.8 | **57.0** | - | - | - | - |

| மாறி | யூலை | ஒகத்து | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.8** | **57.0** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | | | |
| புதிய வியாபாரங்கள் | 59.9 | 60.0 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 63.7 | 63.7 | = | அதிகரிப்பு, சமமான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.1 | 55.8 | + | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 42.9 | 42.8 | - | வீழ்ச்சி, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 71.3 | 62.8 | - | சாதகம், மெதுவான வீதத்தில் |

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.